## 8.8. தஞ்சை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை – அம்பாஸிடர் சீருந்தினைக் கழிவு நீக்கம் செய்தல்

---

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மஅதி–2) துறைள

அரசாணை (டி) எண். 224 நாள்: 25 4.2007

படிக்க:

1. இந்திய அரசு ஊரக வளர்ச்சி அமைச்சகக் கடித எண்.ஆர்–20015/32/2004–மாஊவமு, நாள் 3.1.2005
2. மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தஞ்சாவூர் மாவட்டம் கடிதம் எண்.2517/2006/ஏ1, நாள் 8.12.2006
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண். 66068/ 2006/ எஸ்.ஜி.எஸ்.ஒய்–1.1, நாள் 22.1.2007

**ஆணை**

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தனது கடிதத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலரின் பயன்பாட்டிற்காக அம்பாசிடர் சீருந்து எண்.TN 49G 0121 1997–ம் ஆண்டு வாங்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார். இவ்வாகனத்தை பழுது பார்ப்பது சிக்கனமாக இராது என்று மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் வல்லுநர் குழு தெரிவித்துள்ளது. வல்லுநர் குழுவின் கருத்தினை ஏற்றுக் கொண்டு மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் இயக்குநர் மேற்குறிப்பிட்ட வாகனத்தை முதிரா நிலையில் கழிவு செய்து விற்பனை செய்ய பரிந்துரைத்துள்ளார். ஆகவே, சீருந்து எண்.TN 49G 0121-I கழிவு நீக்கம் செய்து, தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலரின் பயன்பாட்டிற்காக ஒரு புதிய அம்பாசிடர் சீருந்து வாங்குவதற்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அரசின் அனுமதியை கோரியுள்ளார். இச்செயற்குறிப்பினை ஏற்று உரிய ஆணை பிறப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. முதிரா நிலையில் கழிவு செய்ய பரிந்துரைக்கப்படும் வாகனத்தை கழிவு செய்யும் அதிகாரம் அரசு ஆணை (நிலை) எண்.2275, உள் (போக்குவரத்து) துறை, நாள் 10.10.1990–இன்படி அரசிற்கு உள்ளது. மேலும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு வாகனங்கள் வாங்குவது குறித்து மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை கீழ்க்காணும் நிபந்தனைகளை விதித்துள்ளது:–

1) ஊரக வளர்ச்சி முகமைகள் புதிய வாகனங்களை வாங்குவதற்கு ஆகும் செலவு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஊதிய செலவு நிதி 30% விழுக்காடு என்ற உச்சவரம்பிற்குள் இருக்க வேண்டும் 30% விழுக்காடு ஊதிய செலவு நிதிக்கு மேல் செலவு ஏற்படும் இனங்களில் மாநில அரசே செலவினை ஏற்றுக்கொள்ளும்.

2) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் ஆட்சிக்குழு பழைய வாகனத்தைக் கழிவு செய்து புதிய வாகனம் வாங்குவதற்குரிய தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புதல் வேண்டும்.

3) மாநில மோட்டார் வாகன மற்றும் பராமரிப்புத் துறை இயக்குநரின் பழைய வாகன கழிவு சான்றிதழ் (Certificate of condemnation of old vehicle) பெறப்படவேண்டும்.

4. தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் அம்பாஸிடர் சீருந்து எண்.TN 49G 0121–ஐ கழிவு நீக்கம் செய்யலாம் என்ற மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, மேற்குறிப்பிட்ட வாகனத்தை கழிவு நீக்கம் செய்ய அரசு ஆணையிடுகிறது.

5. புதிய வாகனம், ஊதிய செலவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 30% சில்லரை செலவின நிதியிலிருந்து வாங்கப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். மேலும், புதிய வாகனம் வாங்குவதற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை 25.10.2006 அன்று நடைபெற்ற ஆட்சி மன்ற குழு (Governing Body) அங்கீகரித்துள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். ஆகவே, மாவட்ட வளர்ச்சி முகமைக்கு ஒரு புதிய அம்பாஸிடர் சீருந்து வாங்குவதற்கு அனுமதி அளிக்குமாறு அரசினை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

6. மேலே பத்தி 5–ல் குறிப்பிடப்பட்டுள்ள நிலையினைக் கருத்தில் கொண்டு, தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலரின் பயன்பாட்டிற்கு ஒரு அம்பாஸிடர் சீருந்து டி.ஜி.எஸ்.டி.விலையில் (DGS&D rate) வாங்குவதற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்